# கூட்டரசுப் பிரதேசத்தில் 5 இடங்களில்

# தீபாவளி சந்தைகள்

## தற்காலிகமாக 95 கடைகள் அமைக்கப்பட்டன



★ கோலாலம்பூர் மாநகராட்சி மன்றத்தின் சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டப் பிரிவின் இயக்குநர் இஸ்மாடி ஷகிரின் விளக்கமளித்த போது.....

**(எஸ்.ஜீவராஜா - ஆர்.குணா)**

கோலாலம்பூர், அக். 11-

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கோலாலம்பூரிலும் கூட்டரசுப் பிரதேசத்திலும் மொத்தம் 5 இடங்களில் தீபாவளி சந்தை விற்பனைக்கு அனுமதி வழங்கப்பட்டதாக கோலாலம்பூர் மாநகராட்சி மன்றம் தெரிவித்தது.

ஜாலான் மஸ்ஜிட் இந்தியா, பிரிக்பீல்ட்ஸ், துன் சம்பந்தன் வளாகம் ஆகிய இடங்களில் இந்த சந்தைகளை நடத்த வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்று கோலாலம்பூர் மாநகராட்சி மன்றத்தின் சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டப் பிரிவின் இயக்குநர் இஸ்மாடி ஷகிரின் கூறினார்.

பிரிக்பீல்ட்ஸ் மற்றும் ஜாலான் மஸ்ஜிட் இந்தியா ஆகிய பகுதிகளில் தீபாவளி சந்தைக்காக 95 தற்காலிகக் கடைகள் (லோட்) அமைக்கப்பட்டிருக்கின்றன. அக்டோபர் 7ஆம் தேதி தொடங்கி 30ஆம் தேதி வரையில் அவை செயல்பட அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.




கோப்புப் படங்கள்

பிரிக்பீல்ட்ஸில் உள்ள காம்ப்ளெக்ஸ் துன் சம்பந்தன் வளாகத்தில் 10 கடைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. மேடான் செலேரா ஃபைன்ஸ் பசார் பிரிக்பீல்ட்ஸ் பகுதி சில்லறை வணிகர்கள் சங்கத்தினருக்கு சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தக் கடைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

பிரிக்பீல்ட்ஸ் லிட்டல் இந்தியா பெர்சத்துவான் பிரிஹத்தின் வணிகர்கள் ஏற்பாட்டின் பேரில் ஜாலான் டிரவர்ஸ் - ஜாலான் ராக்யாட் பகுதிகளில் 25 கடைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. பிரிக்பீல்ட்ஸ் லிட்டல் இந்தியா சில்லறை வணிகர்கள் சங்கத்தின் கோரிக்கைகளுகு ஏற்ப ஜாலான் துன் சம்பந்தனில் 20 கடைகளும் லோரோங் சான் ஆ தோங் பகுதியில் 8 கடைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.

கோலாலம்பூர் மற்றும் சிலாங்கூர் சில்லறை வர்த்தகர்களின் கோரிக்கைகளுக்கு இணங்க ஜாலான் மஸ்ஜிட் இந்தியா, ஜாலான் புனூஸ் 6 எனுமிடத்தில் 32 கடைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

காலை 10 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை வர்த்தகம் நடத்த அனுமதி வழங்கப்படுகிறது. இந்த தற்காலிக கடைகளில் துணிமணிகள், ஆடைகள், அலங்காரப்பொருட்கள், பொட்டலங்களில் அடைக்கப்பட்ட தின்பண்டங்கள், உணவுப்பொருட்கள், பூஜைப்பொருட்கள், நகை அணிமணிகள் ஆகியவை மட்டுமே இங்கு விற்பதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

ஒவ்வோராண்டும் தீபாவளி பெருநாளின் போது இதுபோன்ற சந்தைகளை நடத்த நாங்கள் அனுமதி வழங்கி வருகின்றோம். இது எதிர்காலத்திலும் தொடரும். சந்தைகளுக்கு வருகின்ற பொதுமக்களின் பாதுகாப்பு முக்கியம்.

எனவே இட வசதிகளை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டி இருக்கிறது. சந்தை காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்படாமல் இருப்பதற்கும் உறுதி செய்ய வேண்டி இருக்கிறது. மக்கள் அதிகமாக கூடுகின்ற மையப்பகுதிகளில்தான் சந்தைகளை அமைக்க வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

மாநகராட்சி மன்றம் விதித்திருக்கின்ற அனைத்து விதிமுறைகளையும் இந்த வர்த்தகர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் இஸ்மாடி கேட்டுக் கொண்டார். அதேசமயத்தில் அந்தப் பகுதியிலுள்ள நிரந்தர கடைக்காரர்கள் வழக்கம்போல் தங்கள் வியாபாரத்தை மேற்கொள்ளலாம் என்றார் அவர்.

பிரிக்பீல்ட்ஸ் லிட்டல் இந்தியாவில் 22 தற்காலிகக் கடைகள் கொடுக்கப்பட்ட நிலையில் திடீரென்று 8 கடைகளை அகற்ற வேண்டும் என்று நிர்ப்பந்தம் வழங்கப்பட்டதாக சில தற்காலிக கடைக்காரர்கள் நேற்று முன்தினம் கூறியிருந்தனர்.

கடைகளுக்கான கூடாரங்கள் அமைக்கப்பட்ட பிறகும் இப்படி ஏன் கடைகளை அகற்ற நெருக்குதல் கொடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டனர். இதுகுறித்து நேற்று செய்தியாளர்களுக்கு விளக்கமளித்தபோது இஸ்மாடி ஷகிரின் இவ்வாறு தெரிவித்தார்.



கோப்புப் படங்கள்